சுருக்கம்

பாசனம் – நபார்டு – RIDF-XIII–சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை வட்டம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான 27 கண்மாய்களை நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் ரூ.557.85 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்தல் – நிர்வாக ஒப்புதல் – ஆணை –வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணித் (ப்பி1) துறை

அரசு ஆணை (நிலை) எண்: 213 நாள்: 20.6.2008
ஆனி 6, திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் புது தில்லி, கடித நாள். 2.4.2007
2. முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வள ஆதார அமைப்பு, கடித எண்.எஸ்.7 (4) /50425/2006/டி.செல் நாள் 27.4.2007
3. தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அமைப்பு, சென்னை கடித எண். ஒ.டி.5/டி.ஒ2/எப்1/1100/வெள்ளம் நாள் 19.2.2008
4. நபார்டு வங்கி கடித எண். என்.பி.எஸ்.ப்பிடி/870/ஆர்.ஐ.டி.எப்–XII (தமிழ்நாடு) 96/ப்பி.எஸ்சி/2007 – 2008 நாள் 19.3.2008

------

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதிய 2.4.2007 நாளிட்ட கடிதத்தில், சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை வட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 27 கண்மாய்கள் உலக வங்கித் திட்டத்தின் கீழ், புனரமைப்பு செய்யும் பட்டியலில் இடம்பெறவில்லை என்றும், இந்த 27 கண்மாய்களை புனரமைப்பு செய்வதற்கான மதிப்பீடு ரூ.534.90 இலட்சம் என்றும், இந்த கண்மாய்களை புனரமைக்க நபார்டு வங்கியின் நிதியுதவி பெற அனுப்பலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

2. இதன் தொடர்பாக முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), தலைமைப் பொறியாளர் திட்டம் மற்றும் உருவாக்கம், மற்றும் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர் ஆகியோரிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் 2007–08 ஆம் ஆண்டு விலை விகிதப்படி மேற்குறிப்பிட்ட 27 கண்மாய்களின் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.528.79 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமிருந்து பெறப்பட்டு நிதியுதவி பெறும் பாருட்டு நபார்டு வங்கிக்கு அனுப்பப்பட்டது.

3. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் நபார்டு வங்கி ரூ.**529.96** இலட்சம் செலவில் கீழ்க்காணும் **27** கண்மாய்களை புனரமைப்பு செய்வதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மாவட்டம் | ஆர்.ஐ.டி.எப். கடனுதவி (R.I.D.F. LOAN) | | | **மாநில அரசின் பங்கு State Govt. Contribution** |
|---|---|---|---|---|---|---|
| | கண்மாய்களை நவீனப்படுத்துதல் | சிவகங்கை | 2007-08 | 2008-09 | மொத்தம் | |
| 1 | அல்லிவயல் | சிவகங்கை | 5.52 | 12.87 | 18.39 | 0.97 |
| 2 | அண்டங்குடி | சிவகங்கை | 4.32 | 10.07 | 14.39 | 0.76 |
| 3 | இரவியமங்கலம் | சிவகங்கை | 7.99 | 18.65 | 26.65 | 1.40 |
| 4 | கலசத்தூர் | சிவகங்கை | 4.58 | 10.58 | 15.11 | 0.80 |
| 5 | கல்லூரராரோனி யேந்தல் | சிவகங்கை | 3.24 | 7.55 | 10.79 | 0.57 |
| 6 | கவதாக்குடி | சிவகங்கை | 8.38 | 19.56 | 27.94 | 1.47 |
| 7 | கீழஉச்சானி | சிவகங்கை | 6.72 | 15.68 | 22.40 | 1.18 |
| 8 | குறமங்கலம் | சிவகங்கை | 3.32 | 7.75 | 11.07 | 0.58 |
| 9 | மேல உச்சானி | சிவகங்கை | 9.67 | 22.56 | 32.23 | 1.70 |
| 10 | மேல பின்னல் கோட்டை | சிவகங்கை | 2.89 | 6.74 | 9.62 | 0.51 |
| 11 | மின்னிட்டாங்குடி | சிவகங்கை | 5.03 | 11.73 | 16.76 | 0.88 |
| 12 | நாகமதி | சிவகங்கை | 3.16 | 7.38 | 10.55 | 0.56 |
| 13 | நகரமங்கலம் | சிவகங்கை | 4.62 | 10.77 | 15.39 | 0.81 |
| 14 | உரசூர் | சிவகங்கை | 6.73 | 15.69 | 22.42 | 1.18 |
| 15 | பொன்னளிக் கோட்டை | சிவகங்கை | 6.61 | 15.43 | 22.05 | 1.16 |
| 16 | பொன்னாதி | சிவகங்கை | 4.47 | 10.43 | 14.90 | 0.78 |
| 17 | பொய்யேந்தல் | சிவகங்கை | 4.02 | 9.39 | 13.41 | 0.71 |
| 18 | சருகனியாறு | சிவகங்கை | 3.78 | 8.82 | 12.60 | 0.66 |
| 19 | செக்கங்குடி | சிவகங்கை | 5.24 | 12.23 | 17.47 | 0.92 |
| 20 | சிறுநல்லூர் | சிவகங்கை | 6.32 | 14.74 | 21.06 | 1.11 |
| 21 | எஸ்.புதுகோட்டை | சிவகங்கை | 3.56 | 8.30 | 11.86 | 0.62 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22 | திரானி | சிவகங்கை | 4.49 | 10.47 | 14.95 | 0.79 |
| 23 | உறுதிக்கோட்டை | சிவகங்கை | 4.38 | 10.22 | 14.60 | 0.77 |
| 24 | உறுவாட்டி | சிவகங்கை | 27.09 | 63.22 | 90.32 | 4.75 |
| 25 | வெண்ணியூர் | சிவகங்கை | 3.71 | 8.65 | 12.36 | 0.65 |
| 26 | வெட்டுக்காடு | சிவகங்கை | 3.17 | 7.39 | 10.55 | 0.56 |
| 27 | இளகாந்தூர் | சிவகங்கை | 6.03 | 14.08 | 20.11 | 1.06 |
| | மொத்தம் | | 158.99 | 370.97 | 529.96 | 27.89 |

4. மேலே பத்தி 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள நபார்டு வங்கியின் ஒப்புதலின் அடிப்படையில், முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் கருத்துருவை ஏற்று சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டத்திலுள்ள 27 கண்மாய்களை புனரமைப்பு செய்வதற்கு நபார்டு வங்கி RIDF–XIII-ன் கீழ் கடனாக ரூ.529.96 இலட்சம் (ரூபாய் ஐநூற்று இருபத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஆறு ஆயிரம் மட்டும்), மாநில அரசு பங்காக ரூ.27.89 இலட்சம் (ரூபாய் இருபத்தியேழு இலட்சத்து எண்பத்தொன்பதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.557.85 இலட்சத்திற்கு (ரூபாய் ஐநூற்றி ஐம்பத்தியேழு இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்குறிப்பிட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“4702 – 00 சிறுபாசனம் குறித்த மூலதனச் செலவு – 101 மேற்பரப்பு நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம்– JJ – நபார்டு கடனுதவியுடன் ஏரிகளை நவீனப்படுத்துதல் 16 பெரும் பணிகள்.”
(த.தொ.கு 4702 00 101 JJ 1609)

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு புதிய துணைப் பணித் திட்டம் (New Instrument of Service) குறித்ததாகும். இது குறித்த செலவினத்திற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு பொது I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாகப் பெற்று, இந்த செலவினத்தை மேற்கொள்ள உரியபடிவத்தில் நிதி (வசெபொ.I) துறைக்கு, இவ்வரசாணையுடன் தற்பொழுது தேவைப்படும் தொகைக்கு, விண்ணப்பிக்குமாறு முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை 5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2008–09–ம் ஆண்டிற்கான துணை மானிய கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு உரிய கருத்துருக்கள் உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வசெபொ. I) துறைக்கு அனுப்புமாறும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியளார் (பொது), சென்னை – 5 அவர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறை அ.சா.கு.எண். 36205/நிதி (பொ.ப.II/2008, நாள் 16.6.2008 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 249 (இருநூற்று நாற்பத்தி ஒன்பது)–ன் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படகிறது.

(ஆளுநரி ன் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசுச் செயலாளர்

பெறுநர்

முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது,
நீர்வள ஆதார துறை, பொதுப்பணித்துறை, சென்னை – 5
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) நீர்வள ஆதார அமைப்பு, சென்னை – 5
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, பொதுப்பணித்துறை,
மதுரை மண்டலம், மதுரை – 2.
மாநிலக் கணக்காயர் 18/35
மாவட்ட ஆட்சித் தலைவர், சிவகங்கை
சிவகங்கை கருவூல அலுவலர், சிவகங்கை

நகல்

நிதி (வ.செ.பொ. I,2 மற்றும் பொ.ப & 2 )த்துறை
மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டம் அவர்களின்
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அனைத்து பாசனப் பிரிவுகள், பொதுப்பணித்துறை, சென்னை – 9.
பொதுப்பணித்துறை (டபிள்யூ), சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்